ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1799/6 - 2013 පෙබරවාරි මස 27 වැනි බදාදා - 2013.02.27

*1799/6 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த சட்டம்

22 (1) (ஊ) என்னும் பிரிவின்கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின்மூலம் இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:

(அ) இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழிற்காணி இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எந்த ஆளின் பெயர் குறித்துரைக்கப்படுகின்றதோ அந்த ஆளுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழிற்காணி, இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எந்த ஆளின் பெயர் காணப்படுகின்றதோ அந்த ஆளுக்கு சொந்தமாயிருந்தது என்பதுடன் அத்தகைய ஆள் எந்த குடும்பத்தின் உறுப்பினராக இருந்தாரோ அந்தக் குடும்பத்தின் தலைவருக்குச் சொந்தமானது எனக் கருதப்பட்ட காணியின் பரப்பளவில் அத்தகைய கமத்தொழிற்காணி உள்ளடக்கப்பட்டது.

(இ) இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எந்த ஆளின் பெயர் காணப்படுகின்றதோ அந்த ஆள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி கமத்தொழிற்காணியின் மீது உச்சவரம்பு விதிக்கப்பட்ட நேரத்தில் பதினெட்டு வயதுக்குக் குறைந்தவராயிருந்தார்;

(ஈ) இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழிற்காணி, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்குப் பாராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லை ; அத்துடன்

(உ) அத்தகைய கமத்தொழிற்காணி தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் நட்டஈடு எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2013, பெப்புருவரி 20.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| தம்மிக ஜயநாத் அமரதுங்க, இல. 57, கிறகரிஸ் வீதி, கொழும்பு 07. | வடமேல் மாகாணம், குருநாகல் நிர்வாக மாவட்டத்தில் தம்பதெனி ஹத்பத்து, உடகஹா கோறளை மேற்கு, பள்ளேகெக்குலாவல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ளதும் கெக்குலாவல வத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கன்னங்கர தயாரித்த 11.06.2003 ஆந் திகதிய 645/ 2003 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 2 எனக் காட்டப்படுவதும் பிரசித்த நொத்தாரிசு ஹென்றி டேவிட் ரணசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 19.02.1968 ஆந் திகதியும் 1148 ஆம் இலக்கமும் கொண்ட உறுதிக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான காணித்துண்டு, அதன் கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு இல. 2 என்பதற்கு எல்லைகளாக வடக்கில்: துண்டு இல. 1, கிழக்கில்: துண்டு இல. 3 மற்றும் வீதி (கம்சபாவ), தெற்கில்: இறுதிக் கிராம வரைபடத்தில் காட்டப்படும் துண்டு இல. 108, மேற்கில்: இறுதிக் கிராம வரைபடத்தில் காட்டப்படும் துண்டு இல. 1ஏ என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு ஒரு ஏக்கர் மூன்று றூட் நான்கு பேர்ச்சஸ் (ஏ01. றூ.03 பே. 04). இது காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது; அத்துடன் வடமேல் மாகாணம், குருநாகல் நிர்வாக மாவட்டத்தில் தம்பதெனி ஹத்பத்து, உடகஹ கோறளை தெற்கு, பள்ளேகெக்குலாவல கிராமத்தில் அமைந்துள்ளதும் கெக்குலாவல வத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கன்னங்கர தயாரித்த 10.07.2003 ஆந் திகதி கொண்ட 650/2003 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்படுவதும் பிரசித்த நொத்தாரிசு ஹென்றி டேவிட் ரணசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 19.02.1968 ஆந் திகதிய 1148 ஆம் இலக்க உறுதியின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான காணித்துண்டு, அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு இல. 1 என்பதற்கு எல்லைகளாக வடக்கில்: ஜே. ஏ. அமரதுங்க என்பவருக்குச் சொந்தமான கெக்குலாவல வத்த, ஜே. ஏ. அமரதுங்க என்பவருக்குச் சொந்தமான 484 ஆம் இலக்க இறுதி கிராம வரைபடத்தில் காட்டப்படும் துண்டு இல. 64, ஹபரலகஹாஹின்ன, முக்கலான, கந்தஹேன முக்கலான, ஜே. பி. புஞ்சிபண்டாவுக்கும் ஏனையோருக்கும் எஸ். ஆர். எம். பொடிஅப்புஹாமிக்கும் ஏனையோருக்கும் சொந்தமான காணி, கிழக்கில்: ஜோன் அமரதுங்க என்பவருக்குச் சொந்தமான 484 ஆம் இலக்க இறுதி கிராம வரைபடத்தில் காட்டப்படும் துண்டு இல. 64, ஹபரலகஹஹின்ன முக்கலான, கந்தஹேன முக்கலான, ஜே. பி. புஞ்சிபண்டாவுக்கும் ஏனையோருக்கும் சொந்தமான காணி, கெக்குலாவல வத்த காணியின் ஒரு பகுதி, வீதி மற்றம் குறிந்திவல வத்த, தெற்கில்: குறிந்திவல வத்த, முகுருகஹஹேன, மேற்கில்: முகுருகஹஹேன மற்றும் வீதி என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இருபத்தெட்டு ஏக்கர் மூன்று றூட் இருபத்தொன்பது தசம் நாலு பேர்ச்சஸ் (28ஏ. 3றூ. 29.4பே.) இது குருநாகல் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. |

03-628